| |
|---|
| **மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் , இராதாபுரம்.**<br>**முன்னிலை - திரு. V.C. குபேரசுந்தர், M.A., B.L.,**<br>**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், இராதாபுரம்.**<br>**2026 ம் ஆண்டு ஜீன் திங்கள் 12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**<br>**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 1493/2020**<br>**CNR No. TNTL 260002612020** |

| | |
|---|---|
| தமிழக அரசு<br>காவல் உதவிஆய்வாளர் மூலம்,<br>கூடன்குளம் காவல் நிலையம்,<br>குற்ற எண். 318/2019. | **... குற்றமுறையிட்டாளர்** |
| /எதிர் | |
| சுடலை, வயது 35/2019,<br>த/பெ. சுப்பையா,<br>தெற்கு தெரு,<br>குறிஞ்சிகுளம். | **.... குற்றஞ்சாட்டப்பட்டவர்** |

இவ்வழக்கானது 05/09/2020-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்து இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றம் முன்பு 09/06/2026-ம் தேதி வந்த போது அரசுக்காக அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை1 அவர்களும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்காக வழக்கறிஞர் திரு.T.பொன்சாமி, B.A.,B.L., அவர்களும் ஆஜராகி, இருதரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

**<u>வழக்கின் விபரங்கள்</u>**

| **வ. எண்** | **காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண்** | **கூடன்குளம் காவல் நிலையம் குற்றஎண். 318/2019** | |
|---|---|---|---|
| 1 | குற்றம் சாட்டப்பட்டவரின் விபரம் | பெயர் | சுடலை |
| | | தந்தை பெயர் | சுப்பையா |
| | | தொழில் | கூலி |
| | | குடியிருப்பு | குறிஞ்சிகுளம் |
| | | வயது | 35/2019 |
| 2 | சம்பவ தேதி | | 02/11/2019 |
| 3 | முறையீடு/குற்ற இறுதி அறிக்கை | | 05/09/2020 |
| 4 | கைது | | 27/11/2019 |
| 5 | பிணையில் விடுவித்ததல் | | 27/11/2019 |
| 6 | ஒப்படைத்தல்/அனுப்பிவைத்தல்/குற்றச்சாற்று | | 27/10/2021 |
| 7 | விசாரணைத் துவக்கம்<br>அ.சா.1 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 16/02/2021 & 16/02/2021 |
| | அ.சா.2 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 09/02/2022 & 03/06/2026 |
| | அ.சா.3 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 09/03/2022 & இல்லை |
| | அ.சா.4 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 01/03/2023 & 01/03/2023 |
| | அ.சா.5 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 14/06/2023 & 14/06/2023 |
| | அ.சா.6 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 09/10/2024 & 09/10/2024 |
| | அ.சா.7 ன் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை | | 08/06/2026 & 08/06/2026 |

| | | |
|---|---|---|
| 8 | கு.வி.மு.ச. பிரிவு 313 ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி | 09/06/2026 |
| 9 | விசாரணை முடிவு | 09/06/2026 |
| 10 | தண்டனை அல்லது உத்தரவு | 12/06/2026 |
| 11 | தீர்ப்புரை நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான காண்முடிவு /முடிவு | 12/06/2026 |
| 12 | காலதாமதத்தின் விளக்கம் | குற்றஞ்சாட்டப்பட்டவர் மற்றும் சாட்சிகளுக்கு சம்மன் அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுத்துள்ளது. |

1) **<u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்</u>**:

கடந்த 02.11.2019 ம் தேதி 20.00 மணியளவில் சாட்சி 1,2 இருவரும் சாட்சி 1 ன் மாமியாரான சாட்சி 3 ன் வீட்டில் உட்கார்ந்து இருந்ததாகவும், அப்போது சாட்சி 1 ன் நாயை எதிரியின் நாய் கடித்து சண்டை போட்டதை பார்த்த சாட்சி 2 அருகில் இருந்த குடத்தை எடுத்து வீசி இரு நாய்களையும் விரட்டியுள்ளதாகவும், உடனே எதிரி கையில் அரிவாளுடன் வந்து சாட்சி 2 யை பார்த்து தேவிடியா முண்ட, எப்படி என் நாயை அடித்து விரட்டலாம் என அசிங்கமாக பேசியதாகவும், எதிரி சாட்சி 2 யை பெண் என்றும் பாராமல் தலைமுடியை பிடித்து இழுத்து சுவற்றில் தள்ளி சாட்சி 2 க்கு வலது கண் அருகே இரத்த காயம் ஏற்படுத்தியதாகவும், எதிரி அருவாளால் சாட்சி 2 யை வெட்ட வந்ததாகவும், அப்போது சாட்சி 1 அவரது இடது கையால் தடுக்க அருவாள் இடது முழங்கையில் பட்டு சாட்சி 1 க்கு பலத்த இரத்த காயம் ஏற்படுத்தி கொடுங்காயம் உண்டு பண்ணியும் குற்றமுறை கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக கூடன்குளம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரி மீத இ.த.ச. பிரிவுகள் 294(பி),326,506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டப் படியும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) **எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு 207 ன் படி நகல் வழங்குதல் :**

இவ்வழக்கில் அரசு தரப்பு வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி, எதிரி நீதிமன்றத்தில் ஆஜரானவுடன், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்க வேண்டிய அரசுத் தரப்பு ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207-ன் படி வழங்கப்பட்டது.

3) **குற்றச்சாட்டு வனைதல்**

எதிரிக்கு வழக்கு நகல்கள் இலவசமாக வழங்கப்பட்ட பிறகு போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் ,294(பி),326,506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டப்படியும் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கிக் கூறி வினாவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர் தான் குற்றவாளியில்லை என்று குற்றச்சாட்டை மறுத்துக் கூறினார். எனவே அரசு தரப்பு சாட்சியத்திற்கு உத்தரவிடப்பட்டது.

4) **அரசு தரப்பு சாட்சிகளில் இருந்து தெரிய வரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:**

அ.சா.2 மலர்விழி தனது சாட்சியத்தில் நான் தற்போது குறிஞ்சி குளத்தில் வசித்து வருகிறேன். இல்லத்தரசியாக இருக்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும், எனது கணவரின் அண்ணன். அ.சா.1 எனது கணவர். கடந்த 02/11/2019-ம் தேதி இரவு 8 மணியளவில் குறிஞ்சி குளம் தெற்கு தெருவில் உள்ள எனது அம்மா வீட்டிலிருந்த போது எனது வீட்டின் உள்ள நாயை எதிரியின் நாய் கடித்து விட்டது. நான் வீட்டிலிருந்த குடத்தால் நாயை அடித்து துரத்தி விட்டேன். அதற்கு எதிரி என்னை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி சென்றார். அதற்கு பிறகு அரை மணி நேரம் கழித்து எதிரி மது குடித்து விட்டு அருவாளை கொண்டு வந்து என்னை அசிங்கமாக பேசி, என்னை வெட்ட முயன்ற போது எனது கணவர் தடுத்ததால் அவருக்கு இடது கையில் வெட்டு பட்டது. எதிரி என்னை கீழே தள்ளி விட்டதில் எனக்கு வலது கண்

புருவத்தில் வெட்டு காயம் ஏற்பட்டது. இதனால் காயம்பட்ட நாங்கள் கஸ்தூரி மருத்துவமனைக்கு எனது கணவரை அழைத்து சென்று சிகிட்சை அளித்தோம். அங்கிருந்து மேல் சிகிட்சைக்காக நாகர்கோவில் ஸ்ரீ ராம் மருத்துமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு ஒரு வாரம் சிகிட்சையில் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட காயத்தினால் 9 மாதங்கள் வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருந்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

5) அ.சா.3 சோபியா தனது சாட்சியத்தில் நான் தற்போது குறிஞ்சி குளத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எனது உறவினர் தான். அ.சா.1 மற்றும் அ.சா. 2 ஐ தெரியும். அவர்களும் எனது உறவினர்கள் தான். தேதி,மாதம்,வருடம் ஞாபகமில்லை. ஒரு நாள் மாலை 5 மணியளவில் எதிரி வீட்டு நாய்க்கும், அ.சா.1-ன் வீட்டு நாய்க்கும் சண்டை ஏற்பட்ட போது அ.சா.1 குடத்தை வைத்து அடித்ததற்கு எதிரி வவந்து ஏசினார். அது பற்றி அ.சா.1 எதிரியிடம் கேட்டதற்கு எதிரி அரிவாளால் அ.சா.1 நாகமணியை வெட்டினார். அதனால் காயம்பட்ட நாகமணியை ஸ்ரீராம் மருத்துமனைக்கு கொண்டு சென்றனர். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6) அ.சா.5 ராமதாஸ் தனது சாட்சியத்தில் நான் தற்போது நாகர்கோவிலில் வசித்து வருகிறேன். நான் ஸ்ரிராம் எலும்பு முறிவு மருததுவமனை நிறுவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். 02-11-2019 இரவு 10.50 மணிக்கு குறிஞ்சிகுளத்தை சார்ந்த 34 வயதான நாகமணி என்பவரை அவரது மனைவி மலர்விழி என்பவர் சிகிச்சைக்காக என்னுடைய மருத்துவமனையில் சேர்த்தார். அவரை அன்றைய தினம் 8 மணியளவில் குறிஞ்சிகுளத்தில் வைத்து தெரிந்த நபர் தன்னை அரிவாளால் தாக்கியதாக கூறினார் அவரை உள்நோயாளியான 02-11-2019 அன்று சிகிச்சைக்கு சேர்த்து 09-11-2019 அன்று சிகிச்சையில் இருந்து விடுவித்தேன். அவரை பரிசோதனை செய்து நுண்கதிர்படம் எடுதது பார்த்ததில் அவருக்கு கீழ்கண்ட

காயங்கள் காணப்பட்டது. இடது முழங்கையில் ஒரு வெட்டு காயம் காணப்பட்டு அதில் அல்னா எனப்படும் எலும்பு முறிந்தும், மற்றும் அல்னா நர்வ் மற்றும் அதை சுற்றியுள்ள தசைகள் அறுந்து காணப்பட்டு, அவரது முழங்கை மூட்டு விலகி காணப்பட்டது. மேற்பட்ட காயத்தை கொடுங்காயம் என சான்று வழங்கினேன். காயச்சான்று அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7) அ.சா.6 பிரபு தனது சாட்சியத்தில் நான் தற்போது கூடன்குளம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு கூடன்குளம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணி புரிந்த போது கடந்த 03.11.2019 ம் தேதி நிலையத்தில் இருக்கும் பொழுது நாகர்கோவில் ஸ்ரீராம் மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் ஸ்ரீராம் எலும்பு மருத்துவமனை சென்று அங்கு சிகிட்சையில் இருந்த குறிஞ்சிகுளம் சுப்பையா மகன் நாகமணி, வயது 34 என்பவரிடம் விசாரித்து புகார் மனுவை 10.30 மணிக்கு பெற்று பின்பு நிலையம் வந்து 12.30 மணிக்கு அதன் தன்மைக்கு ஏற்ப குற்ற எண். 318/2019 இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 506(2) மற்றும் பிரிபு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியிடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் வாக்குமூலத்தை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் வள்ளியூருக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை உதவி ஆய்வாளர் செல்வராஜ் அவர்களுக்கு விசாரணைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8) அ.சா.7 ஜெகதீசன் தனது சாட்சியத்தில் நான் தற்போது கூடன்குளம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். காவல் நிலைய

குற்ற எண்.318/2019 வழக்கின் உள்ள முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக் காவலர் பிரபு மற்றும் புலன்விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளர் செல்வராஜ் ஆகியோர்கள் வேறு காவல்நிலையத்தில் பணி புரிவதால் அவர்களுக்கு அழைப்பாணை அனுப்புவதில் தாமதம் ஏற்படுவதாலும், அவர்கள் சார்பாக ஆவணங்களின் அடிப்படையில் கூடுதல் சாட்சியாக நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 03.11.2019 ம் தேதி 10.30 மணிக்கு கூடன்குளம் தலைமைக் காவலர் பிரபு என்பவர் நிலைய பொறுப்பில் இருந்த போது நாகர்கோவில் ஸ்ரீராம் மருத்துவமனையிலிருந்து போன் மூலம் கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த குறிஞ்சிகுளம் தெற்கு தெருவைச் சேர்ந்த சுப்பையா மகன் நாகமணி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 318/2019 இதச சட்டப்பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) of IPC and 4 of TNPHW act சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கையின் அசலையும் புகார் மனுவையும் இணைத்து கனம் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பியும், இதர நகலை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை விசாரணைக்காக உயர் அதிகாரியின் பார்வைக்கும் வைத்துள்ளார். விசாரணை அதிகாரி வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்டு 03.11.2019 ம் தேதி 13.30 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சக்தீஸ்வரி, ஜெஸி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பார்வைமகஜர் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5,6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.அன்றைய தினமே அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் வைத்து அரிவாள் - 1 ஐ வழக்கு சொத்தாக அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியுள்ளார். அத்தாட்சி அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் படிவம் 91 மூலம் கைப்பற்றப்பட்ட சொத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். படிவம் 91 அ.சா.ஆ.8 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. பின்னர் எதிரியை தொடர்ந்து தேடி வந்த நிலையில் எதிரிகள் அனைவரும் திருநெல்வேலி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று பிணையில் சென்று விட்டார். பின்னர் சாட்சிகள் 1 முதல் 7 மற்றும் வழக்கு பதிவு செய்த பதிவு செய்த தலைமைக் காவலர் பிரபு ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் காயம்பட்ட சாட்சி நாகமணி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் இராமதாஸ் என்பவரை விசாரித்து அவருக்கு ஏற்பட்டிருந்த காயம் கொடுங்காயம் என காயச்சான்று வழங்கியுள்ளார். பின்னர் மருத்துவர் வழங்கிய காயச்சான்றின் அடிப்படையில் வழக்கின் விசாரணை அதிகாரி வழக்கின் சட்டப்பிரிவை 294(b), 323, 324, 506(2) of IPC and 4 of TNPHW act யிலிருந்து 294(b), 326, 506(2) of IPC and 4 of TNPHW ac ஆக வழக்கு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கின் விசாரணை அதிகாரி வழக்கின் எதிரி மீதான குற்றம் உண்மை என தெரிய வந்ததால் 294(b), 326, 506(2) of IPC and 4 of TNPHW act ஆக குற்ற இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

9) **குவி.மு.ச. பிரிவு 313(1) (ஆ) படியான கேள்வி வினவுதல்**:

இவ்வழக்கில் அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியம் முடிவுற்ற பிறகு மேற்கண்ட சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான விபரங்கள் குறித்து எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ) படி எடுத்துக் கூறி வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என மறுத்துள்ளதுடன் தனது தரப்பில் சாட்சிகள் எதுவும் இல்லை என தெரிவிக்கப்பட்டு சாட்சியங்கள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை.

10) **அரசு தரப்பு வாதம்**:

அரசு தரப்பில் அ.சா. 1 முதல் 7 சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.2,3,5,6,7 சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார்கள்.

அ.சா.ஆ. 1 முதல் அ.சா.ஆ.9 ஆவணங்களின் மூலம் அரசு தரப்பில் மேற்படி குற்றச்சாட்டுக்களை எதிரிக்கு எதிராக நிரூபித்துள்ளது என்றும் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்கும் படி வாதிடப்பட்டது.

11) **<u>எதிரி தரப்பு வாதம்</u>:**

எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் அ.சா.1 புகார்தாரர் அரச தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார். அ.சா.2 குறுக்குவிசாரணையில் அரசு தரப்பிற்கு பாதகமாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 கண்ணுற்ற சாட்சியின் முதல் விசாரணையில் தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 கண்ணுற்ற சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார். எனவே எதிரி மீதான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை. அதனால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி விடுதலை செய்யும் படி வாதிடப்பட்டது.

12) **<u>குற்றச்சாட்டு மீதான விவாதம்</u>** :

எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஆகும்?

13) **<u>தீர்வு</u>:**

(i) அ.சா.1ன் சாட்சியத்தை ஆராய்கையில் எதிரி அ.சா.2 ஐ பார்த்து அசிங்கமாக பேசியதாகவோ, எதிரி அருவாளால் அ.சா.1ன் இடது முழங்கையில் வெட்டி அ.சா.1க்கு பலத்த இரத்த காயம் ஏற்படுத்தி கொடுங்காயம் உண்டு பண்ணியதாகவோ, எதிரி சாட்சிகளுக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவோ, எதிரி அ.சா.2ன் பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்தியதாகவோ சாட்சியங்கள் எதுவும் அமையவில்லை. அதாவது அ.சா.1ன் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பரிசிலினை செய்ததில்,

> *"நான் தற்போது குறிஞ்சிகுளத்தில் வசித்து வருகிறேன். ஓட்டுனராக*

*வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரி எனது உடன் பிறந்த சகோதரர் ஆவார். தற்போது எதிரியும் நானும் சமரசம் ஆகிவிட்டோம். வழக்கினை மேல்நடத்த விரும்பவில்லை. காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை"* என்று சாட்சியம் அளித்துள்ளார்.

எனவே அ.சா.1 முதல் விசாரணையில் அரசு தரப்பு வழக்கை உறுதியூட்டி சாட்சியம் அளிக்கவில்லை.

(ii) அ.சா.2 ல் முதல்விசாரணையில் அரசு தரப்பிற்கு ஆதரவாகவும், குறுக்குவிசாரணையின் போது கீழ்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 ன் குறுக்கு விசாரணையில் *"நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் எல்லாம் போலீஸார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் தான் சொன்னேன் என்றால் சரிதான். இந்த வழக்கைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான்"* என்று சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) மேலும் மேலே கூறப்பட்ட சாட்சிங்களை கவனமாக பரிசீலனை செய்ததில், அ.சா.1 ன் முதல் விசாரணையில் *"தற்போது எதிரியும் நானும் சமரசம் ஆகிவிட்டோம். வழக்கினை மேல்நடத்த விரும்பவில்லை"* என்று கூறியுள்ளார். எனவே அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணை செய்யப்பட்டும் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்கும் பொருண்மை எதுவும் அமையவில்லை. அ.சா.1ன் சாட்சியம் நம்பகத்தகுந்ததாகவே இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அ.சா.1ன் முதல்விசாரணை அரசு தரப்பிற்கு ஆதரவாக அமையவில்லை. அ.சா.2 குறுக்குவிசாரணை அரசு தரப்பிற்கு ஆதரவாக

அமையவில்லை. அ.சா.3 கண்ணுற்ற சாட்சியின் முதல் விசாரணையில் தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 கண்ணுற்ற சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார்.

(iv) எனவே இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

(v) இந்நிலையில்,

**1972 (4) SCC 562 SAIT TARAJEE KHIMCHAN AND OTHERS Vs YELAMARTI SATYAM ALIAS SATTEYYA AND OTHERS** இவ்வழக்கில் பாரா நம்பர் 15 ல் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

> ***The mere marking of an exhibit does not dispense with the proof of***

என்று தீர்ப்பளித்துள்ளது.

மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றத்தினுடைய 2 நீதிபதிகள் கொண்ட அமர்வு வழங்கிய தீர்ப்பான **2003 (8) SCC Page No. 245, NARBADA DEVI GUPTA Vs BIRENDRA KUMAR JAISWAL AND ANOTHER** பாரா நம்பர் 16 ;

> ***"The legal position is not in dispute that mere production and marking of a document as exhibit by the court cannot be held, to be a due proof of its contents"***

என்று கூறுகிறது. அதாவது, மேற்படி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளின்படி ஒரு ஆவணத்தை நீதிமன்றத்தில் சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்ட காரணத்தினால் மட்டுமே அந்த ஆவணத்தின் உள்ளடக்கம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக எடுத்துக் கொள்ள முடியாது.

14) **<u>முடிவு</u>:**

இந்நிலையில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1,4 சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக மாறிவிட்டார்கள். அ.சா.2 ன் குறுக்குவிசாரணை அரசு தரப்பிற்கு பாதகமாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 ன் சாட்சியமானது ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளதா என்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்ளும் போது, இந்நீதிமன்றமானது, மாண்புமிகு உச்ச நீதிமன்றம் கொடுத்த முன் தீர்ப்பான ***Vadivelu Thevar vs State of TN AIR 1957 SC 614 wherein held that***

> it is a sound and well – established rule of law that the court is concerned with the quality and not with the quantity of the evidence necessary for, proving or disproving a fact. Generally speaking, oral testimony in this context may be classified into three categories, namely :
> (1) Wholly reliable
> (2) Wholly unreliable
> (3) Neither wholly reliable nor wholly unreliable
> *In case on hand falls the second category of proof, when the PW1 evidence is wholly unreliable it does not require corroboration.*

மேற்கண்ட முன் தீர்ப்பை இவ்வழக்கிற்கு பொருத்தி பார்க்கும்போது பொருந்துவதாக இந்நீதிமன்றம் கருகிறது. மேற்கண்ட முன் தீர்ப்பின் படி அ.சா.1 ன் சாட்சியமே நம்பகத்தகுந்ததாகவே இல்லாத போது மற்ற அரசு தரப்பு சாட்சியங்களின் உறுதியூட்டலை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

15) **இறுதியாக**, அரசு தரப்பில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து இவ்வழக்கின் எதிரியை இ.த.ச. பிரிவுகள் 294(பி),326,506(2) படியும் மற்றும்

பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டப்படியும் குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

16) **வழக்கு சொத்து மீதான உத்தரவு :**

இவ்வழக்கில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கிடை சொத்து பி.ஆர்.எண்.06/2019-ல் கண்டுள்ள குறியீடு செய்யப்படாத வழக்கிடை சொத்தான அரிவாள் ஒன்று மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026-ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 12-ஆம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

V C KUBERRASUNDAR

Digitally signed by V C KUBERRASUNDAR
Date: 2026.06.12 17:17:41 +0530

மாவட்ட உரிமையியல் (ம)

நீதித்துறை நடுவர்,

இராதாபுரம்.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | நாகமணி, த/பெ. சுப்பையா |
| அ.சா.2 | மலர்விழி, க/பெ. நாகமணி |
| அ.சா.3 | சோபியா, க/பெ. மாரியப்பன் |
| அ.சா.4 | மாரியம்மாள், க/பெ . சுப்பையா |
| அ.சா.5 | ராமதாஸ், த/பெ. ராமசாமி |
| அ.சா.6 | பிரபு, த/பெ. பால்பாண்டி |
| அ.சா.7 | ஜெகதீசன், த/பெ. கணபதி (சிறப்பு உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | 03/11/2019 ம் தேதியிட்ட புகார் வாக்குமூலத்தில் அ.சா.1 ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | அ.சா.1 ன் காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.3 | 03/11/2019 ம் தேதியிட்ட முதல்தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 03/11/2019 ம் தேதியிட்ட புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.5 | 03/11/2019 ம் தேதியிட்ட பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | 03/11/2019 ம் தேதியிட்ட மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | 03/11/2019 ம் தேதியிட்ட அத்தாட்சி |
| அ.சா.ஆ.8 | 03/11/2019 ம் தேதியிட்ட படிவம் |
| அ.சா.ஆ.9 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்றுபொருட்கள்** - இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்**-இல்லை

V C KUBERRASUNDAR

Digitally signed by V C KUBERRASUNDAR
Date: 2026.06.12 17:17:53 +0530

மாவட்ட உரிமையியல் (ம)

நீதித்துறை நடுவர், இராதாபுரம்.

**குறிப்பு**

| | |
|---|---|
| 1. | வழக்கின் முடிவு பற்றி காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது. |
| 2. | வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார். |
| 3. | எந்த ஒரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை |